# மன்னார் நகர சபை

## மன்னார் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள; 2013 மார்ச் 28 இல; கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 27 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மன்னார் நகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மன்னார் நகர சபையின் நிலைவரத்தையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்படடிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளில் 02 கணக்குகளின் பெறுமதி ரூபா 25,423 குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது.

#### 1.3.2 கணக்காய்வுக்குச் சான்றுகள் இன்மை

கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 12,878,020 பெறுமதியுடைய 06 மீதிகளை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர சபைக்கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் VII பிரிவு 159(1) வியாபார உரிமம் சம்பந்தமாக வருடாந்தப் பெறுமதி அடிப்படையில் காலத்துக்குக் காலம் அறவிட வேண்டிய தொகை சபையினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி ஒழுங்குவிதி 700 பிரிவு 05 க்கமைய ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வியின் இரண்டாம் பிரதி பொருத்தமான கேள்விச்சபை தீர்மானப் பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) நிதி ஒழுங்குவிதி 702 பிரிவு 03 க்கமைய ஒப்பந்தங்களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 7,504,104 விளைந்திருப்பதுடன் ஒப்பிடும்போது நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாடு செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 3,341,208 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படும்போது திட்டம் சரியான முறையில் வகுக்கப்படாமையினால் செலவினங்களில் மிகையும் சேமிப்பும் வருமானங்களின் பற்றாக்குறையும் மேலதிகமும் ஏற்பட்டுள்ளன.

(ஆ) வருமானங்களில் மேலதிகம் ஏற்படும்போது சபையானது மீள் வருமான மதிப்பீட்டைத் தயாரித்து சபையின் நிர்வாகப்பரப்பினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளாமல் மேலதிக நிதி வங்கியில் நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் வருமான நிலுவை

நகர சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் வருமான நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | 31.12.2012 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| (i) | வீதவரிகளும் வரிகளும் | 1,450,000 | 582,341 | 3,670,899 |
| (ii) | குத்தகை வாடகை | 8,065,000 | 7,392,390 | 4,367,915 |
| (iii) | உரிமங்கள் | 3,255,500 | 3,718,595 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 36,612,300 | 19,935,112 | 1,267,529 |

### 2.3.2 வாடகை

சபையின் கடை வாடகை நிலுவை ரூபா 116,500 நீண்ட காலமாக அறவிடப்படாததுடன் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### 2.3.3 ஏனைய வருமானங்கள்

(அ) சபையின் 2012 முடிவடைந்த ஆண்டிற்கான அரசிறை நிலுவைகளில் மலசலகூட வரி ரூபா 185,931 தொடர்ச்சியாக 05 ஆண்டுகளுக்கு மேலாக காட்டப்பட்டு வருவதுடன் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) சபைக்குரிய குத்தகை வருமதி நிலுவை ரூபா 525,418 நீண்டகாலமாக அறவிடப்படாததுடன் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### 2.3.4 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

2012 திசெம்பர் 31 வரை பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைத் தீர்வைக் கட்டணமாக ரூபா 26,789,126 பெறவேண்டியிருந்தது.

## 2.4 பாவனையற்ற மற்றும் குறைவான பாவனையுள்ள பௌதீக வளங்கள்

நகர சபையில் காணப்படும் 07 வாகனங்கள் சபையினால் பாவனைக்கு உட்படுத்தாமலும் பாதுகாப்பாக வைக்கப்படாமலும் காணப்பட்டன.

## 2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் நிரந்தர காவலாளிக்கு ஜனவரி 2012 தொடக்கம் செப்தம்பர் 2012 வரை ஆளுக்குரிய வரும்படியாக ரூபா 195,795 வழங்கப்பட்டிருந்தபோதும்

அதற்கு மேலதிகமாக தனியார் பாதுகாப்பு நிறுவனத்திற்கு கொடுப்பனவாக சபை நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் மின்சார விளக்குகள் பயன்படுத்தப்படும் 05 இடங்களில் மின்சார பாவனை நீண்டகாலமாக இல்லாதபோதும் மாதாந்த இழிவுக் கட்டணம் ரூபா 11,520 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நடைமுறையாண்டில் மின்சாரக் கட்டணக் கொடுப்பனவின் கால தாமதத்தினால் மின்சார சபைக்கு ரூபா 6,885 செலுத்தப்பட வேண்டிருந்தது.

## 2.6 காலங்கடந்த வைப்புகள்

காலங்கடந்த வைப்புகளான ரூபா 1,502,097 நீண்ட காலமாக உள்ள போதும் நிதிப்பிரமாணம் 571(2) இன் படி நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டிலிருந்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்த வேண்டிய நிலுவை ரூபா 3,804,719 நீண்ட காலமாக செலுத்தப்படாமல் உள்ளதுடன் இது தொடர்பாக நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திடமிருந்து அறவிட வேண்டிய வாடகை நிலுவை ரூபா 138,290 ஆறு ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.

(இ) சபையின் பொது நூலகக் கட்டடத்தின் ஒரு பகுதி மன்னார் பிரஜைகள் குழுவினால் 04 பெப்ரவரி 2012 ஆம் திகதியிலிருந்து பாவனையில் ஈடுபடுத்தப்பட்ட போதும், தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மாதாந்த வாடகையாகிய ரூபா 10,000 இதுவரை அறவிடப்படாமலிருந்தது.

(ஈ) 1984 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியில் ரூபா 1,660,547 பெறுமதியான முற்பண மீதிகள் தீர்வு செய்யப்படாமல் காணப்படுவதுடன் இது தொடர்பான நடவடிக்கையையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது 15 மூலதன செயற்திட்டங்களுக்கென ரூபா 5,000,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் 02 செயற்திட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நகர சபை நடவடிக்கைகள் சம்பந்தமாக போதுமானளவு உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்ளவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) கணக்கீடு

(ஈ) ஆளணி

(உ) நன்கொடை

(ஊ) வாகனங்களின் பயன்பாடு

(எ) நானாவித வைப்புகள்

(ஏ) வரவு செலவுத்திட்டம்